# பேரா. லக்ஷ்மி நரசுவின் பௌத்தப் பண்பாட்டுப் பார்வை

**முனைவர் த. அருள்பத்மராசன்**
**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**உ. நா. அரசினர் கல்லூரி**
**பொன்னேரி- 601204.** arulpadmarajan.d@gmail.com

12

**ஆய்வுச் சுருக்கம்**

கிறிஸ்துவுக்கு முன் தோன்றியது பௌத்த மார்க்கம். உலகம் முழுவதும் கௌதம புத்தரின் சீடர்கள் பௌத்தத்தைப் பரப்பினர். தமிழகத்தில் பௌத்தம் ஏழாம் நூற்றாண்டு வரை செல்வாக்கு செலுத்தியதைச் சங்க இலக்கியம் மற்றும் காப்பியம் வழி அறியமுடிகிறது. சைவம் மற்றும் வைணவ எழுச்சியால் தமிழ்கத்தில் வீழ்ச்சியுற்ற பௌத்தத்தை அயோத்திதாசர் மற்றும் பேராசிரியர் லக்ஷ்மி நரசு எவ்வாறு எழுச்சி பெறச் செய்தனர் என்பதனையும் குறிப்பாக பேரா. லக்ஷ்மி நரசு, அவரின் பணிகள் மற்றும் அறிவியல் துறையில் அவரின் ஆளுமை, அவரின் சமூகப் பார்வை, செயல்படும் தன்மைமற்றும்பேரா. லக்ஷ்மி நரசுவின் பௌத்த நூல்களான பௌத்தத்தின் சாரம்(1907), பௌத்தம் என்றால் என்ன(1916) என்னும் இரு நூல்களின் சிறப்பு, உலக அரங்கில் அந்த நூல்களுக்குக் கிடைத்த பாராட்டு, பௌத்தம் வளர அவர் தோற்றுவித்த சங்கம் அதன் செயல்பாடுகள் பிற சங்கங்களோடு அவருக்கு இருந்த தொடர்பு மற்றும் அவரது இறுதிப் பயணம் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**திறவுச் சொற்கள்**

லக்ஷ்மி நரசு, பௌத்த அறிஞர், பௌத்தத்தின் சாரம், பௌதிக அறிஞர்

**முன்னுரை**

பௌத்தம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் செல்வாக்கு செலுத்தியது என்பதற்குச் சங்க இலக்கியங்களும் காப்பியங்களும் சான்று.ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு பௌத்தம் தளர்ச்சியுற்றது.இந்தத் தளர்ச்சி இந்தியா முழுவதும் இருந்தது. “எட்டாம் நூற்றாண்டு தொடங்கிப் பதினோராம் நூற்றாண்டு வரை மகாயானர்கள் வீழ்ந்து வஜ்ராயினம்(தந்திர பௌத்தம்)) மேலோங்கியது. வஜ்ராயின பௌத்தத்தின் செயல்பாடுகள் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்ததோடு துருக்கியரின் படையெடுப்பும்பௌத்தத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகிவிட்டது. துருக்கியரின் படையெடுப்புக்குப்பின் பௌத்தத்தின் வீழ்ச்சி அடியற்ற மரம்போல் ஆகிவிட்டது”(பௌத்த தத்துவ இயல், ப.180) என்கிறார் ராகுல் சாங்கிருத்யாயன்.

வீழ்ச்சியுற்ற பௌத்தத்தைக் கட்டியெழுப்ப வழிகோலிய தூண்கள் பலவற்றுள் முக்கியமானவர்கள் பண்டிதர் அயோத்திதாசர், பேராசிரியர் லக்ஷ்மி நரசு ஆகிய இருவர். இந்த இருவரின் நூல்களை பதிப்பித்த ஞான அலாய்சியஸ் அவர்களை நன்றியோடு நினைவுகூரவேண்டும். தமிழகத்தில் அயோத்தி தாசரை அறிந்த அளவு லக்ஷ்மி நரசு அடையாளப்படுத்தப்படவில்லை என்பதனால் இக்கட்டுரை பேராசிரியர் லக்ஷ்மி நரசுவைவும் அவர்தம் பௌத்தம் தொடர்பான படைப்புகளையும், பணிகளையும் சுட்டுகிறது.

**லஷ்மி நரசு யார்?**

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் இருந்து பணியின் காரணமாகச் சென்னைக்குக் குடியேறி, சென்னை நீதிமன்றத்தில் வழக்கறிஞராகத் திகழ்ந்தவர் பொக்காலா செல்லாநாயனம்காரு. அவரின் மகன் லஷ்மி நரசு.1861-இல் பிறந்தார். இவர் தெலுங்கு, ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி, பிரெஞ்சு, ஜெர்மன் முதலான மொழிகளில் புலமை பெற்றிருந்தார். 1882 –ஆம் ஆண்டு சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் மாணவராக இருந்தார்.மாணவராக இருந்தபோதே அவர் பகுத்தறிவாளராக இருந்தார். அவர் இறைத்தொண்டர்களை(Missionaries) கேட்கும் கேள்விகள் கல்லூரி இதழில் வெளிவந்தன.(Christian College magazine,714-716) என்பதைத் தெரிந்துகொள்ளமுடிகிறது. பின்னர் 1892-94 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் மீஉயர் தகுதி(Outstanding)பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆரணி ஜாகிர்தார் தங்க பதக்கம் பெற்றார். திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் விரிவுரையாளராகவும் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகவும்திகழ்ந்தார்.1909-ஆம் ஆண்டு கிறித்தவக் கல்லூரியிலிருந்து பச்சையப்பன் கல்லூரிக்குப் பணியாற்றச் சென்று,அந்தக் கல்லூரியில் அவர் பதினாறு ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்.அந்தக் காலத்தில் கல்லூரியில் ஆசிரியர்கள் மேல்நாட்டவர்களாகவும்இந்தியர்கள் துணை ஆசிரியர்களாகவும் இருப்பார்கள். ஆனால் “அறிவியல் சம்மந்தமான விவாதங்களில்குறிப்பாக wireless telegraphy, dynamics ஆகிய துறைகளில்அதிகமான அறிவுத்திறன் பெற்றிருந்ததால் பேராசிரியர் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது.”(பௌத்தம் என்றால் என்ன, ப.5) என்பதை அறியமுடிகிறது.

**லஷ்மி நரசுவின் நூல்களும் அதன் செல்வாக்கும்**

லஷ்மி நரசு நான்கு நூல்கள் எழுதியதாகக் குறிப்பு உள்ளது.1. பவுத்தத்தின் சாரம்(1907), 2. பவுத்தம் என்றால் என்ன(1916) என்னும் இரு நூல்களைக்குறித்து விரிவாகக் காணலாம்.

**பௌத்தத்தின் சாரம்**

லஷ்மி நரசுவின் பல கட்டுரைகள் தொகுக்கப்பெற்று பௌத்தத்தின் சாரம் என்ற நூலாக வெளிவந்தது.அந்த நூல் ஜப்பானிய மொழியில் மொழிபெயர்க்கப்பெற்று ஜப்பானியர்களை மிகவும் கவர்ந்தது.அதனால் இந்நூல் 53 பதிப்புகளைக் கண்டது. அதிக விற்பனையான புத்தகமாக இந்நூல் ஜப்பானில் பொறிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் நாட்டார்கள் புத்தகம் எழுதிய பேராசிரியர் லஷ்மி நரசுவைத் தங்கள் நாட்டுக்கு வந்து பௌத்த சமயப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றும் அதற்கு வேண்டிய செலவு முழுவதும் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும் கூறினார்கள். பலமுறை கூறியும் பேராசிரியர் அந்த அழைப்பை ஏற்கவில்லை.

வங்காளத்தில் ஏராளமான புத்த தர்மா சங்கங்கள் தோன்றுவதற்கு இந்த நூல் காரணமாக அமைந்தது.இந்த நூல் வெளிவந்த ஆண்டில்தான் அயோத்திதாசர் ‘ஒரு பைசா தமிழன்’ இதழைத் தொடங்கினார்.இந்நூல் ஜப்பான் நாட்டிற்குப் பௌத்தபைபிளாகக் கருதப்படுகிறது. அம்பேத்கர் இந்த நூலின் மூன்றாவது பதிப்பை(1948) வெளியிட்டார். அந்த நூலின் முன்னுரையில் “இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புத்தர் குறித்தும் பௌத்தம் குறித்தும் வெளிவந்த பல்வேறு

எழுத்துகளிலிருந்து நரசுவின் எழுத்து தனித்துவம் பெறக் காரணம் என்ன? பொருளாதாரத்தை விவசாயமயமாக்குதல், சமூகத்தைப் பார்பனியமயமாக்குதல் என்ற காலனிய முயற்சியின் பக்கதுணையாக அமைந்த புத்தரின் தொடக்க கால எழுத்துகளின் கீழ் திசை கண்டுபிடிப்புகள் மற்றும் மொழி பெயர்ப்புகளுக்கு மாற்றாக லஷ்மி நரசு விடுதலை தரும் பவுத்தத்தின் அடித்தளத்தைத் துணைக் கண்டத்தில் நிறுவுவதில் ஈடுபட்டிருந்தார். விழிப்புணர்வு மற்றும் பகுத்தறிவு சிந்தனைகளுக்கு அடித்தளமாகவும் அதன் மூலம் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் விடுதலை பெற்ற சமூக வாழ்விற்கு இட்டுச் செல்லக் கூடியதாகவுமே அவர் விடுதலை தரும் பவுத்தத்தைக் கட்டமைத்தார்."(பௌத்தம் என்றால் என்ன, ப.21) என்கிறார் அம்பேத்கர்.

பேராசிரியர் சேதுராமன் எழுதிய 'பௌத்த கலை வரலாறு' என்ற நூலும் பேராசிரியர் க. ஜெயபாலன் எழுதிய 'பண்பாட்டுப் புரட்சியில் பௌத்தம்' என்ற நூலும் பௌத்த சாரம் என்ற நூலில் உள்ள பௌத்தர்களின் கலை ஆற்றலை விவரிக்கின்றன.மேலும் "சைவ வைணவ கலை மரபுகள் பிக்குகளிடம் இருந்து முறைத்தவறி பெறப்பட்டவை என்பதையும் மேற்காணும் நூல்கள் தெரிவிக்கின்றன."(பண்பாட்டுப் புரட்சியில் பௌத்தம், ப.95) என்பதை ஜெயபாலன் நூல்வழி அறியமுடிகிறது.

**பௌத்தம் என்றால் என்ன?**

லஷ்மி நரசு, 'பௌத்தம் என்றால் என்ன?' என்ற நூலை 1916-இல் வெளியிட்டார்.இந்நூலை ஓ. ரா. ந. கிருஷ்ணன் தமிழில் மொழிபெயர்த்து உள்ளார்.இந்த நூல் 202 பக்கங்களைக் கொண்டுள்ளது. 36 தலைப்புகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.இந்த நூல் ஜெர்மன் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.செக்கோஸ்லோவேகியாவின் முதல் ஜனாதிபதியான ஜீன் மெஸாரிக் செக் மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.அது மட்டுமன்றி நூலாசிரியருக்கும் ஒரு படி அனுப்பி வைத்தார்.

பேரா.லஷ்மி நரசுவின் பௌத்தம் என்றால் என்ன?என்ற நூலை மூன்று தலைப்புகளுள் அடக்கி உரைக்கிறது இக்கட்டுரை.1.புத்தரின் மேற்கோள்களை மாறுபாடின்றித் தருதல், 2.புத்தமத அறிஞர்கள் நூல் கருத்தைத் தருதல், 3.மாற்றுக் கருத்துகளைத் தருதல்.பன்மொழியறிவு, படிப்பறிவு, மெய்யறிவு பௌத்தத்தை விஞ்ஞானத்தோடு கலந்து பார்க்கும் ஒப்பிட்டு அறிவு, சான்றோர்கள் நூல்வழி பெற்ற அறிவு என அனைத்தின் கலவை இந்நூல்.

**1. புத்தரின் மேற்கோள்களை மாறுபாடின்றித் தருதல்**

பகுத்தறிவு குறித்து புத்தர் சீடர்களுக்குக் கூறிய அறிவுரைகள் 'திரிபிடகம்' தொகுப்பின் சிறப்பையும் அவற்றின் மூன்று பிரிவுகளான 1.சுத்த பிடகம், 2.விநய பிடகம், 3.அபிதம்ம பிடகம் என்பதைப் பற்றி விரிவாகக் கூறும்போது புத்தரின் மேற்கோள்களை மாறுபாடின்றி கூறுகிறார். புத்தரின் தத்துவக் கருத்துகளைக் கூறி நிலையாமையை விளக்க, சூடு, வீடு, இரதம் முதலானவற்றைஉவமையாக விளக்குகிறார். ஐந்து கந்தங்கள்(உருவம், புலனுணர்வுகள், அறிவுணர்வுகள், மன உருவாக்கங்கள், தன் உணர்வுகள்) சேர்ந்த ஓர் உயிரியல் அமைப்பு மனிதன் எனப் புத்தர் கூறியதை விரித்துரைக்கின்றார்.

**2. புத்தமத அறிஞர்கள் நூல் கருத்தைத் தருதல்**

புத்தமத அறிஞர்களின் கருத்துகளைக் கூறும் போது அதை ஏற்பதற்கும் மறுப்பதற்கும் உலக அளவிலான இலக்கிய நூல்களிலிருந்து மேற்கோள் தருகிறார்.சான்றாக,ஜெர்மானியக் கவிஞர் கதேவின் பாடலடிகளைச் சுட்டுகிறார். புத்த கோஷர் தனது 'விசுத்திமக்கம்'(தூய்மைப்பாதை) என்னும் நூலில் எழுதியுள்ளதையும் சாந்தி தேவர் 'போதி சர்யாவதாரம்'(போதி சத்துவ வாழ்க்கை வழிகாட்டி) என்னும் நூலில் கூறுவதையும் ஜென் பௌத்தத்தை ஜப்பானில் நிறுவியவர்களில் ஒருவரான டோஜென் ட்சென்ஜி கூறிய கருத்தையும் கூறுகிறார். இறுதியாகத் தன் கருத்தைக் கூறி புத்தரின் தத்துவத்தை லஷ்மி நரசு புரிய வைக்கிறார்.

உலக மக்கள் மெய்ம்மையை அடைய எடுக்கும் 'சடங்குகள், வேள்விகள், கடுமையான நோன்புகள்' முதலான மூன்று முயற்சிகளைக் கூறுகிறார். அந்த முயற்சிகளை விஞ்ஞானக் கண் கொண்டு விளக்குகிறார். இந்த மூன்று விதமான நோன்புகளைப் பிராமனர்களைக் கொண்டு நிகழ்த்துவது, நதியில் நீராடுதல், வேள்வி செய்தல் இவைகளைப் பின்பற்றுவோரைச் சாடுகிறார்.இவை குறித்து புத்தர் கூறுவதை விளக்குகிறார்.

சீன மொழியிலுள்ள தம்மபதம் கூறும் கருத்து, சாந்தி தேவர் கூறும் கருத்து, 'நற்பேச்சு' நற்செயல், நற்தொழில், நன்முயற்சி, நல்ல ஆசை, நல்ல எண்ணம் ஆகியனகுறித்து வரும்திரிபிடக தத்துவக் கருத்து, 'சுரில்லோகா' என்கிற நூலில் நாகார் ஜூனர் கூறும் கருத்து என உலக நாடுகளில் உள்ள அறிஞர்கள் புத்த மதம் குறித்துக் கூறுவதை எழுதுகிறார்.

விளம்பரம் என்கிற பெயரில் பொய்யும் பித்தலாட்டமும் தற்காலத்தில் தலைவிரித்தாடுவதையும், பொய், லஞ்சம் மற்றும் வழக்கறிஞர்கள் தனது வாதத்திறமையால் பொருளீட்டப் பொய்யை மெய் என்று நிறுவுவதையும், கட்டணம் அதிகம் பெறுவதற்காகத் தேவையற்றவைகளைக் கூட வைத்தியம் செய்யும் மருத்துவர் முதலானவர்களின் போட்டி மனப்பான்மையையும் கண்டிக்கிறார்.பேராசையும் பயமும் மனிதர்களின் மனதில் கோழைத் தனத்தை உண்டாக்குகிறது என்கிறார்.இறுதியாக ஏழ்மையைப் பற்றி அச்சமில்லாதவன் பூரண சுதந்திரன் என்று, "புத்தர் துறவுக்குத் தரும் விளக்கத்தைக் கூறித்தன்னலப் பற்றைத் துறப்பதே உண்மைத் துறவு."(பௌத்தம் என்றால் என்ன?, ப.130) என்கிறார் லஷ்மி நரசு.

**3. மாற்றுக் கருத்துகளைத் தருதல்**

பௌத்தத் தத்துவங்களுக்கு முரணான கோட்பாட்டாளர்களை மூவகையாகப் பிரித்துப் புத்தர் கூறுவதை எடுத்துரைக்கிறார்.புத்தர் கூறும் நான்கு வகையான முயற்சிகளை எடுத்துரைக்கிறார்.முயற்சியை மேற்கொள்ள ஐந்து விதமான வழிமுறைகளைக் கூறுகிறார்.கடு நோன்பு முறையைவெறுக்கிறார்.பிராமணத் துறவிக்குப் புத்தர் கூறிய பயிற்சி முறைகளைப்பற்றி விளக்குகிறார்.

நான், தான் என்கிற பிரமையைக்களைந்தெறிபவர் எத்தகைய மன உறுதி உடையவராக இருப்பார் என்பதை புத்தரின் கூற்றைக்கொண்டு விளக்குகிறார். தியானத்தைக் குறித்துப் புத்தரின் சீடரான சாரி புத்திரர் இன்னொரு சீடரான ஆனந்தரிடம் கூறும் பதிலையும், தியானப் பயிற்சியால்

விளையும் நன்மைகளையும் சந்திர தீப சமாதி என்னும் நூலிலுள்ள 'சூத்திரம்' எவ்வாறு விளக்குகிறது என்று கூறுகிறார்.புத்தத்தில் வழிபாட்டு முறை இல்லை.தியானத்தின் மூலம் சீலம் பெறலாம் என்கிறார்.தியானத்தின் பலன் சமாதி என்றுரைக்கிறார்.மேலும், மெய்ஞ்ஞானமே நிர்வாணம் என்கிறார்.நாகசேனர் நிர்வாணம் குறித்துக் கூறுவதை நிலை நிறுத்துகிறார்.மரணம் ஒரு நற்பேறு எனக் கிறிஸ்து போதிக்கிறார். பௌத்தம் வாழ்க்கையின் இருண்ட பக்கத்தையே காட்டுகிறது எனக் குறை கூறுவோரின் கேள்விக்குப் பதில் தரும் வகையில் ஒரு பன்றி மகிழ்ச்சியாக இருக்கிறது, ஆனால் பகுத்தறிவுள்ள சாக்ரடீஸ் மகிழ்ச்சியாக இல்லை. ஆகவே சத்தர்மம் போதிக்கும் இலக்கு மகிழ்ச்சி அல்ல. ஆனால் தூய்மையில் முழு நிறைவும் அமைதியும் ஆகும் என விளக்குகிறார்.

**சங்கமும் அதன் செயல்பாடுகளும்**

1898- இல் சென்னை இராயப்பேட்டையில் தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்க்த்தை அயோத்தி தாசர் நிறுவினார். அயோத்திதாசரின் மறைவுக்குப் பிறகு லஷ்மி நரசு அந்த இடத்திற்கு வந்தார். சென்னை நகரிலேயே பெரம்பூரில் ஒரு கிளை அமைத்தார்.சங்கத்தின் மூலம் பள்ளிகள் திறந்தார்.மாகாணத்தின் பிற நகரங்களான பெங்களூர், திருப்பத்தூர், கோலார் தங்கவயல் முதலான இடங்களில் கிளை அமைத்து விழாக்கள் நடத்தினார்.சென்னை, பெங்களூர், கோலார் தங்கவயல் ஆகிய மூன்று இடங்களில் மாநாடு நடத்தினார்.பிற சங்கங்களுடன் நல்ல தொடர்பு வைத்திருந்தார்.

**இறுதிப் பயணம்**

1934- ஆம் ஆண்டு சூலை 14 ஆம் நாள் இதய நோய் காரணமாகத் தமது 73- ஆவது வயதில் இயற்கை எய்தினார். மைலாப்பூர் சுடுகாட்டில் எளிமையான பௌத்த முறைப்படி அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

**முடிவுரை**

இது காறும் கண்டவற்றால் லஷ்மி நரசுவின் பன்மொழியறிவு, பௌதிக அறிவு, பௌத்தம் மலர அவர் எழுதிய நூல்கள், அந்த நூல்கள் உலக அளவில் அறிஞர்களின் செல்வாக்கு பெற்று மொழிபெயர்க்கப்பட்டமை, பௌத்த மாநாடுகள் நிகழ்த்தியமை, சங்கங்கள் பிறவற்றோடு கொண்டிருந்த தொடர்பு முதலியவற்றையும் அன்னாரின் பூத உடல் மறைந்து இன்றும் புகழ் உடல் நிலைத்து இருப்பதையும் காணமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

பார்த்திபன், து. பௌத்தமும் சமூக விடுதலையும், பாலம், சென்னை, 2016

ராகுல் சாங்கிருத்யாயன், (தமிழில் ஏ. ஜி. எத்திராஜுலு), பௌத்தத் தத்துவ இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை, 2021.

லஷ்மி நரசு, பொ, (தமிழில்ஓ.ரா. ந. கிருஷ்ணன்), பௌத்தம் என்றால் என்ன?, மெத்தா பதிப்பகம், சென்னை, 2013.

ஜெயபாலன், முனைவர் க. பண்பாட்டுப் புரட்சியில் பௌத்தம், நிலாசூரியன் பதிப்பகம், சென்னை, 2012.